செ.வெ.எண் :04 நாள் : 03.11.2020

**கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து தொழில்துறை, அரசு முதன்மைச் செயலாளர் /மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.என்.முருகானந்தம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது**

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று(03.11.2020) கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் குறித்து தொழில்துறை அரசு முதன்மைச் செயலாளர் /மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.என்.முருகானந்தம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., மாநகர காவல் ஆணையாளர் திரு.சுமித்சரண் இ.கா.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.பெ.குமாரவேல்பாண்டியன் இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருளரசு இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், சார் ஆட்சியர் பொள்ளாச்சி திரு.வைத்தியநாதன் இ.ஆ.ப., அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்(பொ) மரு.காளிதாசு, இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.நிர்மலா, இணை இயக்குநர் மரு.கிருஷ்ணா, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.ரமேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் தொழில்துறை அரசு முதன்மைச் செயலாளரும் / மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது,**

தமிழ்நாடு அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்க, பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கொரோனா வைரஸ் அறிகுறியுடன் உள்ளவர்களையும் அவர்களுடன் தொடர்பில் உள்ளவர்களையும் தொடர்ந்து கண்காணித்து, பரிசோதனைகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுப்பது, தனிமைப்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்ததின் அடிப்படையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தற்போது குறைந்து வருகிறது.

பண்டிகை காலம் என்பதனால் பொதுமக்கள் கடைவீதிகளுக்குச் செல்வதும், பல்வேறு இடங்களுக்கு சென்று வரும்போது அரசு வழிகாட்டி நெறிமுறைகளை

முறையாக பின்பற்றப்படுவதையும், பொது வெளியில் வரும்போது முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியினை கடைபிடிப்பதனையும், அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். கொரோனா வைரஸ் தொற்று முற்றிலும் ஒழிக்கும் வகையில், அனைத்து துறை அலுவலர்களும் விழிப்புணர்வுடன் பணியாற்றிட வேண்டும்.

வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். அனைத்து சாலைகளிலும் தண்ணீர் தேங்காத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். நெடுஞ்சாலைகள் துறை மூலம் பாலங்கள், சாலைகள் ஆகியவை பழுதடைந்திருந்தால் சரிசெய்திடவேண்டும்.

பொதுமக்களுக்கு குடிநீர் முறையாக சுத்திகரிக்கப்பட்டு தங்கு தடையின்றி விநியோகம் செய்திடவும் தேவையான நடவடிக்கைகளை உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், ஆற்றுக்கரையோரங்களில் உள்ள கிராமங்களில் உரிய முறையில் அறிவிக்கைகள் அளித்திட வேண்டும். மணல் மூட்டைகள் போதுமான அளவில் தயார் நிலையில் வைத்திட வேண்டும். மின்சார வாரிய அலுவலர்கள் மின்கம்பிகளிலுள்ள உள்ள பழுதுகள் உடனடியாக சரி செய்திட வேண்டும்.

ஆற்றங்கரையோரங்களில் குடியிருக்கும் பொதுமக்களை கனமழையின் போது பாதுகாப்பாக தங்கவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மழை காலங்களில் கீழே விழும் மரங்களை உடனே அகற்ற தேவையான ஆட்கள் மற்றும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மழை நீர் தேங்கும் இடங்களில் நீரை வெளியேற்ற மின்மோட்டார்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.மீட்புக் குழுக்கள் குறுகிய கால அளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்றடைய ஏதுவாக தேவையான உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

வருவாய்த்துறையின் வட்ட எல்லைக்குள் உள்ள மழைமானிகள் மற்றும் அவற்றின் இருப்பிடங்களை தணிக்கை செய்து மழைமானிகள், வயர்லெஸ் சாதனைங்கள், போன்றவை நல்ல நிலையில் இயங்குவதை அனைத்து வட்டாட்சியர்களும் உறுதி செய்யவேண்டும்.

மேலும், மழைநீர் சேகரிக்க ஏற்றவகையில் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான குளங்கள் மற்றும் குட்டைகளை தூர்வாரப்பட்டுள்ள நிலையில் அவற்றிற்கு தண்ணீர் வழங்கும் வாய்க்கால்களின் வழியினை சீரமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்திடவேண்டும். வழங்கல் துறை பொதுமக்களுக்கு தேவையான அளவிற்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கிட தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். சுகாதாரத்துறையினர் மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு நோய் தொற்று ஏற்படாத வண்ணம் சுகாதாராத்தினை பேணிகாத்திட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான மருந்துகள் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும்.

கால்நடை பராமரிப்புத்துறையினரும், கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்கள் கிராமங்கள் தோறும் தொடர்ந்து நடத்திட வேண்டும். கால்நடைகளை மேடான பகுதிகளில் தங்கவைக்க வேண்டும். அனைத்து துறைஅலுவலர்களும், பணியாளர்களும் தலைமையிடத்தில் இருந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தொழில்துறை, அரசு முதன்மைச் செயலாளர் / மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து மாநகரப்பகுதிகளான புட்டுவிக்கி, பேரூர், ஆத்துப்பாலம் ஆகிய பகுதிகளில் பொதுப்பணித்துறை மூலம் நொய்யல் ஆறு புணரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும், செங்குளத்தில் தடுப்புச்சுவருடன் கூடிய தார்சாலை அமைக்கப்படுவதையும், பி.கே புதூர் பகுதியில் செங்குளம் வாய்க்கால் தூர்வாரப்பட்டுள்ள பணிகளையும், உக்கடம் பெரியகுளக்கரையில் எழில்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் புணரமைப்பு பணிகளையும், உக்கடம் - ஆத்துப்பாலம் மேம்பாலப்பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட தொழில் துறை, அரசு முதன்மைச் செயலாளர் / மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.என்.முருகானந்தம் இ.ஆ.ப., அவர்கள் பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்தும், தரமாகவும் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**